DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.95/2018**

Deposition of witness for Prosecution அ.சா.8

Name : சவரிமுத்து
Father/ Husband Name : அந்தோணி
Village :
Taluk :
Calling :
Age :

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 22.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் பணங்குடி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 2வது எதிரி சரவணனை எனக்கு தெரியாது. அரசி என்பவர் வீட்டில் நகை திருடு போனது தெரியும். 2வது எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அரசி எங்களுக்கு பங்காளி முறை என்பதால் நகை திருடு போனது சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு சென்று வந்தது தொடர்பாக காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். **(மேற்படி 2வது எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 3வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி 3வது எதிரியின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது) என்**னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான் அதை காரைக்குடி நீதிமன்றத்தில் வைத்து போட்டேன். **(மேற்படி அத்தாட்சி மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 20.02.2018ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய வட்ட ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 08.02.2018ம் தேதி வாகன தணிக்கையின் போது 2வது எதிரி சரவணனை கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வதாக கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் தொடர்சியாக 3வது எதிரி காளீஸ்வரனை கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் 1வதாக கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் தொடர்சியாக 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியின் அடிப்படையில் முத்துக்குமார் என்பவரின் நகைக் கடையில் கைப்பற்றப்பட்ட சுமார் 4 பவுண் எடையுள்ள தங்க செயினை அத்தாட்சியில் ஆய்வாளர் கைப்பற்றியதற்கு சாட்சியாக இருந்து 1வதாக கையெழுத்து போட்டுவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது)**

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.